# இந்துசமயப் பேரவை

## யாழ்ப்பாணம்

# ஆண்டறிக்கை

## 01.01.2002 - 31.12.2005


நிரந்தர முகவரி :
141, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தொ.பே.இல. 021 - 222 6048

கல்லூரி [illegible]

# இந்து சமயப்பேரவை - யாழ்ப்பாணம்
## ஆண்டறிக்கை
## 01.01.2002 – 31.12.2005.

மதிப்பார்ந்த தலைவர் அவர்களே!
எமது பெருமதிப்பிற்குரிய காப்பாளர்களே!
பேரன்பிற்குரிய பேரவை உறுப்பினர்களே!

எல்லாம்வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து எமது பேரவையின் 4வது ஆண்டறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். கடந்த காலத்தில் எமது நாட்டில் நடைபெற்ற போர்காரணமாக எமது மதத்திற்கு ஏற்பட்ட பல்வேறுபட்ட அச்சுறுத்தல்களைத் தடுத்து நிறுத்தி எமது மக்களையும் எமது மதத்தையும் காப்பாற்ற எம்மால் இயன்றவற்றைத் திரிகரண சுத்தியோடு செய்துள்ளோம். இக்காலப்பகுதியில் எமதுபேரவை பல்வேறு சோதனை-களையும் தடைகளையும் தாண்ட வேண்டியிருந்தது.

எமது பேரவையின் முதலாது ஆண்டறிக்கை 28.02.1994இல்வெளியிடப்பெற்றது.இரண்டாவதுஆண்டறிக்கை 28.07.2001இல்வெளியிடப்பெற்றது.மூன்றாவது ஆண்டறிக்கை

10.02.2002 இல் வெளியிடப்பெற்றது. அன்றிலிருந்து இன்றுவரை 30 தடவைகள் எமது நிர்வாகசபை கூடியுள்ளது. நாம் இக்காலப் பகுதியில் பல்வேறுபட்ட சமய சமூகப் பணிகளை செய்துள்ளோம்.

## சைவமாநாடு

சைவசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் 2002ஆம் ஆண்டு மே மாதம் 3ம், 4ம், 5ம் திகதிகளில் எமது பேரவையால் சைவமாநாடு நடாத்தப்பெற்றது. இம்மாாநாட்டில் சிறப்புச் சொற்பொழிவாளர்களாக சென்னை இலயோலாக் கல்லூரிப் பேராசிரியர் அ. பாலறாவாயன் அவர்களும், சென்னைப் பல்கலைக்கழக தத்துவப் பேராசிரியர் இரா. கோபாலகிருஷ்ணன் அவர்களும் கலந்துகொண்டனர். மாநாட்டு இறுதி நாளில் துறைசார் அறிஞர்கள், கலைஞர்கள் கௌரவிக்கப்பெற்றனர். இம்மாநாட்டை நடத்துவதற்கு பணஉதவி வழங்கிய வர்த்தகப் பெருமக்களுக்கும், மாநாட்டைத் திறம்பட நடாத்த உதவிய யாழ் பல்கலைக்கழக இந்து மன்றத்தினருக்கும் ஏனைய சைவத்தமிழ் அன்பர்களுக்கும், ஏனைய பெரியோர்களுக்கும், குறிப்பாக இம்மாநாட்டின் இணைப்பாளரும் அன்றைய பொறுப்பாளருமான பேராசிரியர்

நா.ஞானகுமாரன் அவர்களுக்கும் நிதி சேகரிப்பில் முன்னின்றுழைத்த அன்பர் திரு. த. சற்குணராசா அவர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## தலைமைச் செயலகப் புகுவிழா.

எம்மால் பலாலி வீதி கந்தர்மடத்தில் கொள்வனவு செய்யப்பெற்ற காணியில் அமைந்த கட்டிடம் புனரமைப்புச் செய்யப்பெற்று 20-10-2002 இல் பேரவைத் தலைமைச் செயலகமாக திறந்து வைக்கப்பெற்றது. இவ்வலுவலகம் காலத்தேவைக்கேற்ப நவீனமயப்படுத்தப்பெற்று எமது பணிகள் விரிவுபடுத்த வேண்டியது அவசியமானதாகும்.

## சைவச்சிறுவர் இல்லம் புகுவிழாவும் இயங்காமையும்.

2000ம் ஆண்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக கைதடியில் இயங்கி வந்த சைவச்சிறுவர் இல்லம் ஏழாலையில் இயங்கவேண்டியதாயிற்று. சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டு A9 பாதை திறந்த பின் கைதடிச் சைவச்சிறுவர் இல்லம் புனரமைக்க வேண்டும் என்ற கருத்து பலராலும் முன்வைக்கப் பெற்றதாலும் 2002

நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப் பெற்றதாலும் கைதடிச் சைவச்சிறுவர் இல்லம் எமது பேரவைப் பணத்தில் இருந்து புனரமைப்புச் செய்யப்பெற்று 15-01-2003 இல் புகுவிழா சிறப்பாக நடைபெற்றது.

துர்அதிஷ்டவசமாக 11.04.2003 இல் நடைபெற்ற பொலிஸ் நீதிமன்ற நடவடிக்கைகளால் இவ்வில்லம் மூடப்பெற்றது. அங்கிருந்த ஊழியர்கள் கைதுசெய்யப் பெற்றதோடு பேரவைக் கௌரவசெயலாளர் திரு. சி. சக்திகிரிவன் அவர்களும் கைதுசெய்யப் பெற்று 2 மாதங்கள் விளக்க மறியலில் வைக்கப் பெற்றனர். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எமக்கு சட்ட ஆலோசனைகள் வழங்குவதற்குப் பல சட்டத்தரணிகள் முன் வந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் வழக்கில் சட்டத்தரணி அ. விநாயகமூர்த்தி LL.B, சட்டத்தரணி என் ஸ்ரீந்தா, சட்டத்தரணி எம்.சபாநாதன், சட்டத்தரணி எஸ்.கந்தசாமி ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சட்டத்துறை அதிபதிகள் திணைக்களக் கட்டளைப்படி கௌரவ செயலாளர் அவர்கள் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலை செய்யப் பெற்றார். இத்துடன் பெண் மேற்பார்வையாளர்களும், ஆசிரியர்களும் விடுதலை செய்யப் பெற்றனர். பொறுப்பாளர் க. வை. தர்மராசதுரை மீது வழக்குகள் தொடரப்பெற்று வழக்குகள் நடைபெற்று

வருகின்றது. இவ்வழக்குகளின் போது ஏற்பட்ட செலவுகள் கௌரவ செயலாளரின் சகோதரர்களால் நேரடியாக வழங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியத் திருநாட்டு ஆதீனங்கள் எழுந்தருளல்.

2003ம் ஆண்டு பிற்பகுதியில் திருவாவடுதுறை ஆதீன குருமகா சன்னிதானம் சீலத்திரு. சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளும், தர்மபுரம் ஆதீன தம்பிரான் சுவாமிகளும், பேரூர்ஆதீன சன்னிதானம், சாந்தலிங்க அடிகளும், மெய்கண்டார் ஆதீன சுவாமிகளும் எமது பேரவைக்கு எழுந்தருளி சில நாள் தங்கி சிவப்பணியாற்றி தாயகம் சென்றுள்ளனர். இவ் ஆதீனங்கள் எமது பேரவைப் பணிகளை முன்னெடுப்பதற்கு தமது ஆத்மீக ஆதரவை என்றும் வழங்க சித்தமாகவுள்ளதாகத் தெரிவித்தனர்.

## விசேட பூஜைகளும் நடராஜர் அபிஷேகமும்.

2003இல் இடம்பெற்ற நீதிமன்ற நடவடிக்கை காரணமாக ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானுக்கு வருடந்தோறும் நடைபெறும் ஆறு அபிஷேகங்களில் ஐந்து அபிஷேகங்களை எம்மால் நிகழ்த்த முடியாமல் போனது. எனினும் அப்பெருமானின்

திருவருளால் 2004 சிவராத்திரி தினம் தொடக்கம் இந்து சமயப் பேரவைத் தலைமைச் செயலகத்திற்கு நடராஜப் பெருமானை எழுந்தருளச் செய்து உரிய அபிஷேகங்களும் மாதசங்கிராந்திப்பூசை,சிவராத்திரி,நவராத்திரி, கேதாரகௌரி பூசை, பௌர்ணமிபூசை, திருவாசக முற்றோதல், திருமுறைப்பாராயணம், பிரதோஷம், தைப்பூசம், தை அமாவாசை, பிள்ளையார் சஷ்டி, திருவெம்பாவை ஆகியன நடைபெற்று வருகின்றன. நடராஜர் அபிஷேகத்திலும் திருவாசக முற்றோதலிலும் சிறப்பு நற்சிந்தனைகளும், சொற்பொழிவுகளும் நடைபெற்று வருகின்றன. இந்நாட்களில் மகேஸ்வரபூசை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஒரு நடராஜர் அபிஷேசத்திற்கு ரூபா 10,000 வரையில் தேவைப்படுகின்றது. நாளாந்த பூசைக்கும் மாத சங்கிராந்திக்கும் ரூபா 3000 வரையில் தேவைப்படுகின்றது. இச் செலவுகளில் பேரவையால் செலவிடப்படும் சிறு தொகையை விட பூசை சம்பந்தமான செலவுகளும், மகேஸ்வர பூசை போன்றவையும், உபசரணைகள் போன்றவையும் பேரவை கௌரவ செயலாளர் அவர்களின் சொந்தப் பணத்திலிருந்தே செலவு செய்யப்பட்டு வருகின்றது. 2005ஆம் ஆண்டு மாசி மாத நடராஜர் அபிஷேகத்தை திரு ச. சற்குணராசா அவர்களும்,

சித்திரை மாத அபிஷேகத்தை திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்களும், ஆனி மாத அபிஷேகத்தை திரு. அ. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும், தமது உபயமாகச் செய்தனர். ஏனைய அபிஷேகங்களும், பூசை நிகழ்வுகளும் வழமை போல் கௌரவ செயலாளரின் உபயமாகவே நடைபெற்றன.

## மாதாந்த நிகழ்வு

பௌர்ணமி தினங்களில் விஷேட சொற் பொழிவுகளும்,கலந்துரையாடல்களும்,கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றுவருகின்றது. மற்றும் இந்தியத் திருநாட்டில் இருந்து வருகைதந்த ஆதீனங்களினதும் சமயத் தலைவர்களினதும் அருளுரைகளும் ஆய்வுரைகளும் இடம்பெற்றன.

## பேராசிரியர் கா. குகபாலன் அவர்கள் பதிற் பொருளாளராகத் தெரிவு செய்யப்பெற்றார்.

பேரவைப் பொருளாளராக பணிபுரிந்த பேராசிரியர் நா.ஞானகுமாரன் அவர்கள் இராஜினாமாச் செய்த காரணத்தினால் 03.01. 2004 இல் நடைபெற்ற கூட்டத்தில் பேரவைப் பதில் பொருளாளராக பேராசிரியர் கா. குகபாலன் அவர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பெற்றார்.

## அருட்கவியின் மறைவிற்கு அஞ்சலி

இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ.வினாசித்தம்பி அவர்கள் 11.12.2005இல் மகாசமாதி அடைந்தமை எமது பேரவைப் பணிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவரது மறைவையொட்டி 12.12.2005 உதயன் பத்திரிகையில் இதழ் ஒன்றை வர்த்தகப் பெருமக்களின் உதவியுடன் வெளியிட்டோம். அவரது மகாசமாதி வைபவத்தில் நாம் அனைவரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினோம். பேரவை உபதலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் தலைமையில் அமரர் இல்லத்தில் அன்றைய தினம் அஞ்சலி உரைகளையும் பிரார்த்தனையையும் நடத்தினோம். மகாசமாதியடைந்த தினத்திலிருந்து ஒருவார காலம் பேரவைத் தலைமைச் செயலகத்தில் பேரவைக்கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தது. 16.12.2005 அருட்கவியின் அருள்நிலைப் பேற்றை ஞாபகப்படுத்தி எமது தலைமைச் செயலகத்தில் திருவாசகமுற்றோதலும், பிரார்த்தனையும் மகேஸ்வரபூசை-யும் நடைபெற்றது.

## அமரத்துவம் அடைந்த ஏனைய அங்கத்தவர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

கடந்த பேரவை ஆண்டில் அமரத்துவம் அடைந்த எமது பேரவை ஆரம்ப கால உறுப்பினர் நீர்வேலி கந்தசாமி கோயில் பிரதம சிவாச்சாரியார் கிரியா ஞானதிலகம் சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள் அவர்களுக்கும் கைதடி அஷ்டலஷ்சுமி பதிப்பாளர் குலபதி ஆறுமுகம் கந்தையா அவர்களுக்கும், ஏழாலை திரு. ச. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும் கொக்குவில் திரு. சண்முககுமரேசன் அவர்களுக்கும், ஊரெழு மு. வீரசிங்கம் அவர்களுக்கும், உடுவில் திரு. வே. சிவபாலசிங்கம் அவர்களுக்கும், தும்பளை திரு. சி. முருகேசம்பிள்ளை அவர்களுக்கும், குப்பிளான் திரு. அ. காசிப்பிள்ளை அவர்களுக்கும் தேகாந்த நிலையில் எமது பணிவான அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சோதனைகளும், தடைகளும் நிறைந்த இச்சூழ்நிலையில் எமது பேரவையின் கண்ணியம் மிக்கப் பணி மிக அவசியமானதென்பதை அனைவரும் எற்றுக் கொண்டுள்ளனர். இந்நேரத்தில் நாம் அனைவரும் இன, மத உணர்வுகள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கக் கூடிய வகையில் எமது செயற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டியுள்ளது.

எமது மக்கள் விடிவு பெற்று வாழவும் இந்நாட்டில் உண்மைச் சமாதானம் மலரவும் எமது பணிகள் உரம்பெற்று வளர்ந்தோங்க எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரனை திரிகரண சுத்தியோடு பிரார்த்திப்போமாக!

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்
பொதிநலன் னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே.

- பெரியபுராணம் -

நன்றி

சி.க. சிற்றம்பலம்
துணைத்தலைவர்.

சி. சக்திகிரீவன்
கௌரவ செயலாளர்.

01.01.2005.

உ

சிவமயம்

# இந்துசமயப்பேரவை - யாழ்ப்பாணம்.

## நிதியறிக்கை.

இந்த நிதியறிக்கை 01-01-2002 தொடக்கம் 31-12-2004 வரைக்குமான அறிக்கையாக அமைகின்றது.

முன்னர் இந்து சமயப்பேரவை, சைவச்சிறுவர் இல்லம், சமய சமூக அபிவிருத்தி நிதியம், இந்துதர்மம் என வேறுபட்டு வெளியிடப்பட்ட அறிக்கைகள் இன்று ஒன்றிணைக்கப்பட்டுவெளியிடப்படுவதை அறியத்தருகிறோம்.

2002ம் ஆண்டு நன்கொடையாகவும், மாநாட்டிற்கு அன்பளிப்பாகவும் கிடைத்த பணம் 22,45493 ரூபா 26 சதமாகும். சந்தாப்பணமாகக் கிடைத்த பணம் 4190 ரூபாவாகும். கால்நடை மூலம் கிடைத்த பணம் 1010 ரூபா ஆகும். வட்டியாகக் கிடைத்த பணம் 417681 ரூபா 33 சதமாகும். மொத்தமாகக் கிடைத்த பணம் 26,68374 ரூபா 59 சதமாகும். 2002 ஆண்டில் பொது நிதி 4154825.35 சதம். மொத்தம் 6823199 ரூபா 83 சதம் ஆகும். சைவச்சிறுவர் இல்ல திருத்தத்திற்கு பகுதிக் கொடுப்னவு 375,000 ரூபா. இந்துசமயப்பேரவைத் தலைமைச் செயலகம் கொள்வனவு செய்ய 2080000 ரூபாவும்.

தலைமைச் செயலகத் திருத்தச் செலவு 379920 ரூபாவும், விழாச் செலவுக்கு 42830 ரூபாவும், எம்மால் நடாத்தப்பட்ட சைவ மகாநாட்டுச் செலவுக்கு 165047 ரூபாவும், இந்து தர்மம் அச்சிட்ட செலவுக்கு. 26500 ரூபாவும், காகிதாதி செலவாக 6976 ரூபாவும், தொலைபேசிச் செலவுக்கு 2600 ரூபாவும். போக்குவரத்துச் செலவுக்கு 4000 ரூபாவும், வங்கிக் கட்டணமாக 3013 ரூபா 13 சதம். மின்சாரச் செலவாக 650 ரூபாவும் எம்மால் வழங்கப் பெற்ற அன்பளிப்புக்காக 1204.50 ரூபாவும், சைவச்சிறுவர் இல்லச் செலவுக்கு 1440108 ரூபா. 75 சதமும் செலவு செய்யப்பெற்றது.

2002-12-31 இல் நிதிநிலை:- நிலையான சொத்தாக காணிகட்டிடம் 20,80000 ரூபாவும். உபகரணம் 87,109 ரூபா 50 சதம். நகை 22150 ரூபா நிலையான வைப்பிலுள்ள பணம் 1408416 ரூபா 95 சதம். சேமிப்பு வைப்பிலுள்ள பணம் 450429 ரூபா 22 சதம். நடைமுறைக் கணக்கிலுள்ள பணம் 212284 ரூபா 60 சதம். காசு மீதி 1,14960 ரூபா 27 சதமாகும்.

2003ம்ஆண்டு நன்கொடையாகவும் அன்பளிப்பாகவும் கிடைத்த பணம் 11,41231 ரூபா ஆகும். சந்தாவாகக் கிடைத்த பணம் 2560 ரூபா ஆகும். வளவு வருமானம்

1000 ரூபா ஆகும். புத்தக விற்பனை 75 ரூபா. நடராஜப் பெருமான் ஊர்வலத்தால் கிடைத்த பணம் 6667 ரூபா 50 சதம். சேமிப்பு, நிலையான வைப்பிற்கு கிடைத்த வட்டி 146792 ரூபா 02 சதம். மொத்தம் 1298325 ரூபா 50 சதம். 2003 இல் பொது நிதி 4375350 ரூபா 54 சதம். இதில் நிலையான சொத்து அடங்குகின்றது. மொத்தம் 5673676 ரூபா 04 சதமாகும். தொலைபேசி இணைப்பிற்குச் செலவு செய்த பணம் 18300 ரூபா. கோயில் செலவு 17795 ரூபா. ஊழியர் வேதனம் 24,000 ரூபா. தலைமைச் செயலகக் கட்டிடத் திருத்தம் 4358 ரூபா. உபசரணைச் செலவு 2135 ரூபா. போக்குவரத்துச் செலவு 1100 ரூபா. புகைப்படச் செலவு 1440 ரூபா, கோயில் உபகரணச் செலவு 2625 ரூபா. தளபாடப் பராபரிப்பு 800 ரூபா, பாவனைப்பொருள் 110 ரூபா, பொங்கல் விழா 105 ரூபா, பத்திரிகை 105 ரூபா, பொதுச் செலவு 2766 ரூபா. தபாற்செலவு 90 ரூபா, ஒளி 616 ரூபா, காகிதாதி 877 ரூபா, சுத்தம் செய்த கூலி 700 ரூபா, பற்றுவரி 1000 ரூபா, சிறுவர் இல்லச் செலவு 1412549 ரூபா. 26 சதம். இதில் சிறுவர் இல்லத் திருத்த மீதிக் கொடுப்பனவு 493236 ரூபா 50 சதம். எம்மால் செலவு செய்யப்பட்ட தொகை 70765 ரூபா 50 சதம். மிதிவண்டி திருத்தம் 465 ரூபா, மொத்தச் செலவு 1491471 ரூபா. 67 சதம்.

2003-12-31 இல் நிதிநிலை:- நிலையான சொத்து, காணிகட்டிடம் 2080000 ரூபா, நகை 22150 ரூபா, 50 சதம்,

தளபாட உபகரணம் 129559 ரூபா 50 சதம், புத்தகம் 6250 ரூபா, நிலையான வைப்பிலுள்ள பணம் 1263416 ரூபா 95 சதம், சேமிப்பு வைப்பிலுள்ள பணம் 501471 ரூபா 24 சதம், நடைமுறைக் கணக்கிலள்ள பணம் 181430 ரூபா 87 சதம் ஆகும்.

2004ம் ஆண்டு அன்பளிப்பாகக் கிடைத்த பணம் 13176 ரூபா ஆகும். வளவு வருமானம் 350 ரூபா, சேமிப்பு, நிலையான வைப்பு மூலம் கிடைத்த வட்டி 105372 ரூபா 59 சதம் ஆகும். மொத்தம் 118898 ரூபா 59 சதம். 2004 இல் பொது நிதி 4182204 ரூபா 39 சதம். இதில் நிலையான சொத்துக்கள் அடங்குவது குறிப்பிடத்தக்கது. செலவீனங்கள். அலங்காரப் பொருள் 12915 ரூபா. இதில் நடராஜர் திரை வரைந்தமை, புகைப்படம் பிறேம் பண்ணுதல், பூக்கன்றுகள் கொள்வனவு செய்தமை அடங்குகின்றது. காகிதாதிகள் 895 ரூபா போக்குவரத்துச் செலவு 2980 ரூபா, உபசரணைச் செலவு 8441 ரூபா 50 சதம். எரிபொருள் 160 ரூபா, விளம்பரம் 1200 ரூபா, தளபாடத் திருத்தம் 3250 ரூபா, மின்கட்டணம்,

ஏனைய 7215 ரூபா, கோயிற் செலவு 28027ரூபா, கணக்குப் பதிவுச் செலவு 1500 ரூபா, வளவு சுத்தம் செய்த செலவு 4300 ரூபா, கணக்குப் பரிசோதனைக் கட்டணம் 4000 ரூபா, சிறுவர் இல்ல ஏனைய செலவு 50,000 ரூபா, வங்கிக் கட்டணம் 865 ரூபா, தொலைபேசிக் கட்டணம் 9624 ரூபா. 03 சதம், கட்டிடத் திருத்தப் பராமரிப்பு 203372 ரூபா. 50 சதம், இச் செலவில் அறைகளுக்கு அருகில் மூன்று மலசல கூடங்கள், குளியலறை புனரமைத்தல். கராஜ் திருத்தம் பூஜை மேடை அமைத்தல், வர்ணம் பூசல் என்பன அடங்குகின்றது.

2004-12-31 ஆம் திகதியில் நிதிநிலை:- நிலையான சொத்து 2272469 ரூபா 95 சதம். இதில் காணிகட்டிடம், தளபாடம், நகை, புத்தகம் என்பன உள்ளடங்கப் படுகின்றன. நிலையான வைப்பிலுள்ள பணம் 1305872 ரூபா 92 சதம். சேமிப்புக் கணக்கிலுள்ள பணம் 266544 ரூபா 37 சதம். நடைமுறைக் கணக்கிலுள்ள பணம் 115985 ரூபா 33 சதம், காசு மீதி 1485 ரூபா 80 சதம் ஆகும்.

2005ம் ஆண்டு நிதியறிக்கை இதுவரை கணக்காய்வு செய்யப்படாததால் எம்மால் வெளியீடு செய்யப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

நெருக்கடி நிறைந்த காலத்தில் எமக்கு பேராதரவு வழங்கி வருகின்ற இந்துசமய அபிமானிகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் பேரவை சார்பில் எமது நன்றிய - றிதலைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். தொடர்ந்து வருங்காலத்தில் புதியதிட்டங்களை அறிமுகப்படுத்தி எம்மவர் நல்வாழ்விற்கும் எமது மதத்தின் தனித்துவத்தைப் பேணுவதற்கும் அன்பர்கள், அபிமானிகளின் தாராளமான நிதி உதவியினை வேண்டி நிற்கின்றோம். எல்லாம் வல்ல ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரைத் தியானித்து இந்த நிதி அறிக்கையை நிறைவு செய்கின்றோம்.

| | | |
|---|---|---|
| சி.க.சிற்றம்பலம்<br>துணைத்தலைவர் | கா. குகபாலன்<br>பொருளாளர். | சி. சக்திகிரீவன்<br>கௌரவ செயலாளர் |

01.01.2005.

# இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்.
## 31. 12. 2004இல் உள்ளவாறான ஐந்தொகை

| விபரம் | | தொகை ரூ. ச | தொகை ரூ. ச |
|---|---|---|---|
| பொது நிதி | | | |
| 01.01.2004ல் மீதி | | | 4182204 39 |
| கழி- வருமானத்திலும் கூடிய செலவு | | | 219846 44 |
| | | | 3962357 95 |
| நிலையான சொத்து 01.01.2004 மீதி இவ்வருட சேர்க்கை | 1.1.2004ல் மீதி | | |
| காணி கட்டிடம் | 2080000 00 | | 2080000 00 |
| நகை | 22150 00 | | 22150 00 |
| தளபாடமும், உபகரணம் | 129 559.50 | 31860.00 | 161419 50 |
| புத்தகம் | 6250 00 | 2650.00 | 8900 00 |
| | 2237959 50 | 34510.00 | 2272469 50 |
| நிலையான வைப்பு | | | |
| வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் | | 350000.00 | |
| இலங்கை வங்கி | | 920237 50 | |
| தேசிய சேமிப்பு வங்கி | | 35635 45 | 1305872 95 |
| சேமிப்பு வைப்பு | | | |
| வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி யாழ்பாணம் | | | |
| க/கு இல 8600925247 | | 121745 91 | |
| தேசிய சேமிப்பு வங்கி க/கு இல 1131 | | 144798 46 | 266544 37 |
| வங்கியில் உள்ள பணம் | | | |
| வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி | | | |
| க/கு இல 1060024270 | | 73027 00 | |
| க/கு இல 13220 | | 10302 98 | |
| இலங்கை வங்கி க/கு இல 23446 | | 32655 35 | 115985 33 |
| காசு மீதி | | | 1485 80 |
| | | | 3962357 95 |

இந்து சமயப்பேரவை, யாழ்ப்பாணம் நிதி நடவடிக்கைகள் சரியான முறையில் காட்டப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்

அருட்கவி. சீ. வினாசித்தம்பி — தலைவர்

கா. குகபாலன் — பொருளாளர்

சி. சக்திகிரீவன் — கௌரவ செயலாளர்

இந்து சமயப்பேரவை, யாழ்ப்பாணம் 31.12.2004ல் உள்ள ஐந்தொகையும் அதே திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவுக் கணக்கையும் எமக்குத் தரப்பட்ட ஆவணங்கள், புத்தகங்கள் என்பவற்றைக் கொண்டு தயாரித்துள்ளோம். இவை எம்மால் பரிசீலனை செய்யப்பட்டு சரியென உறுதிப்படுப்படுகின்றது

192 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

எஸ். செல்வேந்திரா அன்கோ
பட்டயக்கணக்காளர்கள்

# 31.12.2004ல் முடிவடைந்த ஆண்டிற்காக வருமான செலவுக் கணக்கு

| விபரம் | தொகை ரு. சதம் | தொகை ரு. சதம் |
|---|---|---|
| **வருமானங்கள்** | | |
| அன்பளிப்பு | | 13176 00 |
| வளவு வருமானம் | | 350 00 |
| பெற்ற வட்டி - | | |
| நிலையான வைப்பு | 88078 76 | |
| சேமிப்பு வைப்பு | 17293 83 | 105372 59 |
| | | 118898 59 |
| கழி – **செலவீனங்கள்.** | | |
| அலங்காரப் பொருள் | 12915 00 | |
| காதிதாதிகள் | 895 00 | |
| போக்குவரத்துச் செலவு | 2980 00 | |
| உபசரணை | 8441 50 | |
| எரிபொருள் | 160 00 | |
| விளம்பரம் | 1200 00 | |
| தளபாட திருத்தச் செலவு | 3250 00 | |
| ஒளி செலவு | 7215 00 | |
| கோவில் | 28027 00 | |
| கணக்குப் பதிவுக் கட்டணம் | 1500 00 | |
| சுத்தம் செய்தல் | 4300 00 | |
| கணக்குப் பரிசோதனைக் கட்டணம் | 4000 00 | |
| சிறுவர் இல்ல ஊழியர் சம்பளம், ஏனையவையும் | 50000 00 | |
| வங்கிக் கட்டணம் | 865 00 | |
| தொலைபேசிக் கட்டணம் | 9624 03 | |
| கட்டிட திருத்தச் செலவும் பராமரிப்பும் | 203372 50 | 338745 03 |
| வருமானத்திலும் கூடிய செலவு. | | 219846 44 |

## 31.12.2003ல் ஒன்றிணைக்கப்பட்ட ஐந்தொகை

| விபரம் | தொகை<br>ரூபா சதம் | தொகை<br>ரூபா. சதம் |
|---|---|---|
| **பொது நிதி** | | |
| 1.1.2003 ல் மீதி | | 4375350 54 |
| **கழி** – செலவிலும் குறைந்த வருமானம் | | 193146 15 |
| | | 4182204 39 |
| பொருளாளர் கடன் | | 2074 17 |
| | | 4184278 56 |
| **நிலையான சொத்து** | | |
| காணி கட்டிடம் | | 2080000 00 |
| நகை | | 22150 00 |
| தளபாடமும் உபகரணமும் | | 129559.50 |
| புத்தகம் | | 6250 00 |
| **நிலையான வைப்பு** | | |
| வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் | 350000 00 | |
| இலங்கை வங்கி | 880000 00 | |
| தேசிய சேமிப்பு வங்கி | 33416 95 | 1263416 95 |
| **சேமிப்பு வைப்பு** | | |
| வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் | | |
| க/கு இல 8600925247 | 363153 04 | |
| தேசிய சேமிப்பு வங்கி க/கு இல 1131 | 138318 20 | 501471 24 |
| **வங்கியில் உள்ள பணம்** | | |
| வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் | | |
| க/கு இல 1060024270 | 73027 00 | |
| க/கு இல 13220 | 6792 02 | |
| இலங்கை வங்கி க/கு இல 23446 | 101611 85 | 181430 87 |
| | | 4184278 56 |

இந்து சமயப்பேரவை, யாழ்ப்பாண நிதி நடவடிக்கைகள் சரியான முறையில் காட்டப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்கின்றோம்.

அருட்கவி. சீ. வினாசித்தம்பி — தலைவர்
கா. குகபாலன் — பொருளாளர்
சி. சக்திகிரீவன் — கௌரவ செயலாளர்

இந்துசமயப்பேரவை, யாழ்ப்பாணம் 31.12.2003 இல் உள்ள ஐந்தொகையும் அதே திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவுக் கணக்கையும் எமக்குத் தரப்பட்ட ஆவணங்கள், புத்தகங்கள் என்பவற்றைக் கொண்டு தயாரித்துள்ளோம். இவை எம்மால் பரிசீலனை செய்யப்பட்டு சரியென உறுதிப்படுத்தப்படுகின்றது.

192 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

எஸ். செல்வேந்திரா அன்கோ
பட்டயக்கணக்காளர்கள்

## இந்துசமயப்பேரவை , யாழ்ப்பாணம்.
## 31.12.2003 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கு

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| வருமானங்கள் - | | |
| அன்பளிப்பு | 22250 00 | |
| சந்தா | 2560 00 | |
| வளவு வருமானம் | 1000 00 | |
| புத்தக விற்பனை | 75 00 | |
| கோவில் ஊர்வலம் | 6667 50 | |
| நன்கொடை | 1118981 00 | |
| பெற்ற வட்டி | | |
| சேமிப்பு வைப்பு | 24042 02 | |
| நிலையான வைப்பு | 122750 00 | 1298325 52 |
| | | 1298325 52 |
| கழி – செலவுகள். | | |
| தொலைபேசி இணைப்பு | 18300 00 | |
| கோவில் | 17795 00 | |
| ஊழியர் வேதனம் | 24000 00 | |
| கட்டிடத் திருத்தம் | 4358 00 | |
| உபசரணை | 2135 00 | |
| போக்குவரத்துச் செலவு | 1100 00 | |
| புகைப்படம் | 1440 00 | |
| உபகரணம் - கோவில் | 2625 00 | |
| தளபாட பராமரிப்பு | 800 00 | |
| பாவனைப் பொருள் | 110 00 | |
| பொங்கல் விழா | 105 00 | |
| பத்திரிகை | 105 00 | |
| பொதுச் செலவு | 2766 41 | |
| தபால் செலவு | 90 00 | |
| ஒளி | 616 00 | |
| காகிதாதிகள் | 877 00 | |
| சுத்தம் செய்தல் | 700 00 | |
| பற்று வரி | 1000 00 | |
| சிறுவர் இல்லச் செலவு குறிப்பு I | 1412549 26 | 1491471 67 |
| வருமானத்திலும் கூடிய செலவு | | 193146 15 |

# குறிப்பு இல 1. சிறுவர் இல்லச் செலவுகள்

| விபரம் | | [illegible]<br>ரூ. சதம் |
|---|---|---|
| மாணவர்களுக்கான செலவு | 1.1 | 260961 65 |
| உணவுச் செலவு | | 275775 88 |
| சம்பளமும் கூலியும் | | 100693 00 |
| எரிபொருள் செலவு | | 43122 50 |
| சமையலறை உபகரணம் | | 13028 00 |
| கோவில் | | 79120 00 |
| தபால் | | 6573 00 |
| காகிதாதிகள் | | 6953 00 |
| பத்திரிகை | | 4851 00 |
| கணக்காய்வு | | 1000 00 |
| விளம்பரம் | | 500 00 |
| அன்பளிப்பு | | 850 00 |
| அலங்காரப் பொருள் | | 24171 00 |
| நீர் விநியோகம் | | 8624 00 |
| விவசாயம் | | 5030 00 |
| சுத்தம் செய்தல் | | 1325 00 |
| கால் நடை பராமரிப்பு | | 14911 00 |
| வங்கிச் செலவு | | 593 23 |
| திருத்தமும் பராமரிப்பும் | 1.2 | 564467 00 |
| | | 1412549 26 |
| **1.1 மாணவர்களுக்கான செலவு** | | |
| உபகரணம் | | 30413 90 |
| பாவனைப் பொருள் | | 35051 00 |
| மருத்துவம் | | 6676 00 |
| முடிசீர் செய்தல் | | 1095 00 |
| பிரயாணம் | | 48220 00 |
| உடை | | 61220 50 |
| வசதிக்கட்டணம் | | 3416 00 |
| சலவை | | 5979 00 |
| மின்சாரம் ஒளி செலவு | | 64355 25 |
| பல்கலைக்கழக மாணவர் உதவி | | 1000 00 |
| பொதுச் செலவு | | 3535 00 |
| | | 260961 65 |
| **1.2 திருத்தமும் பராமரிப்பும்.** | | |
| கட்டிடத் திருத்தம் | | 70765 50 |
| ஒப்பந்தகாரர் மூலம் | | 493236 50 |
| மிதிவண்டி திருத்தம். | | 465 00 |
| | | 564467 00 |

# 31.12.2002 இல் ஒன்றிணைக்கப்பட்ட ஐந்தொகை

| | விபரம் | தொகை ரூபா சதம் | தொகை ரூபா. சதம் |
|---|---|---|---|
| | பொது நிதி | | |
| 1.1 | 2002 ல் மீதி | | 4154825 33 |
| | செலவிலும் கூடிய வருமானம் | | 220525 21 |
| | | | 4375350 54 |
| | நிலையான சொத்து | | |
| | காணி கட்டிடம் | | 2080000 00 |
| | உபகரணம் | | 87109 50 |
| | நகை | | 22150 00 |
| | நிலையான வைப்பு | | |
| | வரையறுக்கப்பட்டவர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் | 350000 00 | |
| | இலங்கை வங்கி | 1025000 00 | |
| | தேசிய சேமிப்பு வங்கி | 33416 95 | 1408416 95 |
| | சேமிப்பு வைப்பு | | |
| | வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் | | |
| | க/ கு இல 8600925247 | 320064 13 | |
| | தேசிய சேமிப்பு வங்கி க/கு இல 1131 | 130365 09 | 450429 22 |
| | நடைமுறைக் க/ கு | | |
| | வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் | | |
| | க/கு இல 13219 | 61027 00 | |
| | க/கு இல 13220 | 2292 02 | |
| | இலங்கை வங்கி க/கு இல 23446 | 148965 58 | 212284 60 |
| | காசு மீதி | | 114960 27 |
| | | | 4375350 54 |

இந்து சமயப்பேரவை, யாழ்ப்பாண நிதி நடவடிக்கைகள் சரியான முறையில் காட்டப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்கின்றோம்.

அருட்கவி. சீ. வினாசித்தம்பி
தலைவர்

கா. குகபாலன்
பொருளாளர்

சி. சக்திகிரீவன்
கௌரவ செயலாளர்

இந்துசமயப்பேரவை, யாழ்ப்பாணம் 31.12.2002 இல் உள்ள ஐந்தொகையும் அதே திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவுக் கணக்கையும் எமக்குத் தரப்பட்ட ஆவணங்கள், புத்தகங்கள் என்பவற்றைக் கொண்டு தயாரித்துள்ளோம். இவை எம்மால் பரிசீலனை செய்யப்பட்டு சரியென உறுதிப்படுத்தப்படுகின்றது

192 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்



எஸ். செல்வேந்திரா அன்கோ
பட்டயக்கணக்காளர்கள்

## 31.12.2002 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கு

| விபரம் | தொகை<br>ரூபா சதம் | தொகை<br>ரூபா சதம் |
|---|---|---|
| **வருமானங்கள்** | | |
| நன்கொடை | | 2230493 26 |
| அன்பளிப்பு | | 15000 00 |
| சந்தாப்பணம் | | 4190 00 |
| கால்நடை | | 1010 00 |
| வட்டி | | 417681 33 |
| | | 2668374 59 |
| **செலவினங்கள்** | | |
| இந்த சமயப் பேரவை | | |
| திருத்தச் செலவு சிறுவர் இல்லம் 375000 00 | | |
| இந்துசமயப்பேரவை 379920 00 | 754920 00 | |
| விழாச் செலவு | 42830 00 | |
| மகாநாட்டு செலவு | 165047 00 | |
| இந்து தர்மம் | 26500 00 | |
| காகிதாதிகள் | 6976 00 | |
| தொலைபேசி | 2600 00 | |
| போக்கு வரத்துச் செலவு | 4000 00 | |
| வங்கிக் கட்டணம் | 3013 13 | |
| மின்சாரம் | 650 00 | |
| அன்பளிப்பு | 1204 50 | |
| சிறுவர் இல்லச் செலவுகள் குறிப்பு 1 | 1440108 75 | 2447849 38 |
| செலவிலும் கூடிய வருமானம். | | 220525 21 |

## குறிப்பு இல 1 சிறுவர் இல்லச் செலவுகள்.

| விபரம் | தொகை ரூபா சதம் |
|---|---|
| மாணவர்க்கான செலவு 1.1 | 405080 25 |
| கோவில் | 86916 50 |
| உணவுச் செலவு | 570646 25 |
| தபால் செலவு | 18940 50 |
| சம்பளமும் கூலியும் | 128120 00 |
| எரிபொருள் | 46565 50 |
| பத்திரிகை | 15904 50 |
| காகிதாதிகள் | 25636 50 |
| சமையல் உபகரணம் | 6387 00 |
| தருமம் அன்பளிப்பு | 13950 00 |
| பொதுச் செலவு | 17602 00 |
| கணக்குப் பரிசோதனைக்கட்டணம் | 4000 00 |
| கணக்குப் பதிவுக்கட்டணம் | 8500 00 |
| விளம்பரம் | 6315 00 |
| பராமரிப்பு — 1.2 | 33795 50 |
| கால்நடை பராமரிப்பு | 36659 25 |
| விவசாயம் | 15072 00 |
| நீர் விநியோகம் | 18.00 |
| | 1440108 75 |
| குறிப்ப இல 1.1 மாணவர்க்கான செலவு | |
| மாணவர்- உபகரணம் | 48332 50 |
| பாவனைப் பொருள் | 68991 25 |
| மருத்துவம் | 36389 00 |
| முடி சீர் செய்தல் | 1495 00 |
| பிரயாண செலவு | 71057 00 |
| உடை | 96301 00 |
| வசதிக் கட்டணம் | 3462 00 |
| சலவை | 12027 00 |
| மின்சாரம் | 43275 50 |
| பல்கலைக் கழக மாணவர்க்கான உதவி | 23000 00 |
| பொது | 750.00 |
| | 405080 25 |

1.2 பராமரிப்புச் செலவு

| | |
|---|---|
| கட்டிடம் | 13795 .50 |
| மதிவண்டி | 910. 00 |
| தளபாடம் | 19090. 00 |
| மொத்தம் | 33795. 00 |

077 62 58 305



Rajh Computer printing. 43, Palaly Rd, Kantharmadam, Jaffna